# பல்துறைக்கல்வி

## வினாக்கள்

1. ஏட்டுக் கல்வி குறித்து திரு.வி.க வின் கருத்து யாது?

ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது. இந்நாளில் கல்வி என்பது பொருள் அற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை மனப்பாடம் செய்து தேர்வில் தேறிப், பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. இதுவே ஏட்டுக் கல்வி குறித்த திரு.வி.க.வின் கருத்து ஆகும்.

2. கல்வி குறித்து விஜயலட்சுமி பண்டிட் மற்றும் குலோத்துங்கன் அவர்களின் கருத்து யாது?

விஜயலட்சுமி பண்டிட்

கல்வி என்பது வருவாய் ஈட்டும் வழிமுறை மட்டும் அன்று. அது மெய்ம்மையைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையுமாகும்.

குலோத்துங்கன்

ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும் இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும் வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்.

3. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க.கூறுவனவற்றை எழுதுக

கலப்பில் வளர்ச்சி உண்டு என்பது இயற்கை நுட்பம். தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டைநிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கம் தேட வேண்டும் என்கிறார். கலைகள் யாவும்

தாய்மொழி வழி மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தப்படும் காலமே தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று திரு.வி.க. கூறுகின்றார்

4. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

உலக வாழ்விற்கு மிக இன்றியமையாதது அறிவியல். உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றைப் பற்றிய அறிவும், கோள் இயக்கம், கணிதம், அகத்திணை முதலிய அறிவும் நமக்கு வேண்டும். இந்நாளில் புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது. இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆகவே, அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞர்கள் உலகில் பரவ வேண்டும் என்று திரு. வி. க. கூறுகின்றார்.

5. காப்பியக் கல்வி குறித்து திரு.வி.க.கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

வாழ்விற்கு உரிய இன்பத் துறைகளில் காவிய இன்பமும் ஒன்று. தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் காப்பியங்களைக் கற்க கற்க பெறும் இன்பத்தை சொல்லால் சொல்ல இயலாது.

**கூடுதல் வினாக்கள்**

1. பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய தொகுப்பில் அடங்கும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.

2. பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய தொகுப்பில் அடங்கும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.

3. திரு.வி.க குறித்து குறிப்பு எழுதுக.